# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
mendukung cita-cita hendak:

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden.

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

**(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)**

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# தமிழ்மொழி

## BAHASA TAMIL

SEKOLAH KEBANGSAAN

ஆண்டு TAHUN

# 2


PENULIS:
SARMELLAA SANTIE RAJANDRAN
KUMARAGURU KUPPUSAMY

EDITOR:
TAMIL ARASI SINNASAMY

PENGURUS PROJEK:
MUHAMMAD FAIZ MOHAMAD ALI

PEREKA BENTUK:
MOGAN KUMAR RAJU

ILUSTRATOR:
MOHD ZAWAWI ZAID





DBP

Dewan Bahasa dan Pustaka
Kuala Lumpur
2017

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No. Siri Buku: 0141

KK 494-221-0106041-49-1596-20101
ISBN 978-983-49-1596-4

Cetakan Pertama 2017
© Kementerian Pendidikan Malaysia 2017

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.
Diterbitkan untuk
Kementerian Pendidikan Malaysia oleh:
Dewan Bahasa dan Pustaka,
Jalan Dewan Bahasa,
50460 Kuala Lumpur.
Telefon: 03-21479000 (8 talian)
Faksimile: 03-21479643
Laman Web: http://www.dbp.gov.my

Reka Letak dan Atur Huruf:
Dewan Bahasa dan Pustaka

Muka Taip Teks: Anjal InaiMathi

Saiz Muka Taip Teks: 18 poin

Dicetak oleh:
Percetakan Nasional Malaysia Berhad,
Jalan Chan Sow Lin,
50554 Kuala Lumpur.

## PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada pihak berikut:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Buku Teks dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu, Dewan Bahasa dan Pustaka.
- Jawatankuasa Pembaca Luar, Dewan Bahasa dan Pustaka.
- SK Taman Senangan, Butterworth, Pulau Pinang.
- SK Bandar Baru Sungai Lalang, Sungai Petani, Kedah.
- Institut Pendidikan Guru, Kampus Raja Melewar, Seremban, Negeri Sembilan.
- SJKT Sepang, Sepang, Selangor.
- SK Sacred Heart Convent, Melaka.
- SK Taman Puteri Wangsa, Ulu Tiram, Johor.

# உள்ளடக்கம்


முன்னுரை v

## தொகுதி 1 பள்ளிக்கூடம்

1 சொல்வதைச் செய்வேன் 1-2
2 விளையாட்டு நேரம் 3
3 பள்ளிக்குச் செல்வோம் 4-5
4 செய்யுளும் மொழியணியும் 6

## தொகுதி 2 நற்சிந்தனை

1 கடைப்பிடிப்போம் 7
2 நண்பன் கிடைத்தான் 8-9
3 நன்றே செய் 10-11
4 இலக்கணம் 12

## தொகுதி 3 அனுபவங்கள்

1 பண்புடன் பேசுவோம் 13
2 இனிய உலகம் 14-15
3 என்னால் முடியும் 16-17
4 செய்யுளும் மொழியணியும் 18

## தொகுதி 4 குடும்பம்

1 உறவுகள் அறிவோம் 19
2 சிற்றப்பாவின் வருகை 20-21
3 காய்கறித் தோட்டம் 22-23
4 இலக்கணம் 24

## தொகுதி 5 மகிழி

1 வார நாள்கள் 25
2 ஓய்வு நாள் 26-27
3 மொழி விளையாட்டு 28-29
4 செய்யுளும் மொழியணியும் 30

## தொகுதி 6 தொழில்முனைப்பு

1 இன்றைய உணவு 31
2 கேளிக்கைச் சந்தை 32
3 சிறுதொழில் செய்வோம் 33
4 இலக்கணம் 34

## தொகுதி 7 இன்ப உலா

1 இனிய பொழுது 35
2 விலங்ககம் சென்றோம் 36
3 உருவாக்கி மகிழ்வேன் 37
4 செய்யுளும் மொழியணியும் 38

## தொகுதி 8 நிகழ்ச்சி

1 பசுமை இயக்கம் 39
2 குடும்பநாள் 40-41
3 பிறந்தநாள் விழா 42-43
4 இலக்கணம் 44

## தொகுதி 9 சமூகம்

1 வேண்டுகோளை நிறைவேற்றுங்கள் 45
2 அழைப்பிதழ் 46
3 முயற்சி செய் 47
4 செய்யுளும் மொழியணியும் 48

## தொகுதி 10 உறவுகள்

1 அன்புக் குடும்பம் 49-50
2 பொங்கலோ பொங்கல் 51
3 நல்ல முயற்சி 52-53
4 செய்யுளும் மொழியணியும் 54

## தொகுதி 11 அறிவியல்

1 அறிவியல் கூடம் 55
2 என்னை அறி 56-57
3 சொல் உருவாக்கலாம் 58-59
4 இலக்கணம் 60

## தொகுதி 12 ஒற்றுமை

1 ஒன்றுகூடல் 61
2 சந்தை 62-63
3 ஓய்வு நேரம் 64-65
4 செய்யுளும் மொழியணியும் 66

## தொகுதி 13 உயர்வெண்ணம்

1 ஊக்கம் கொள் 67
2 அன்பு கொள் 68
3 பயிரிடுவோம் 69
4 இலக்கணம் 70

## தொகுதி 14 உணவு

1 சுவை அறிந்தேன் 71
2 உணவே மருந்து 72-73
3 உணவுக் கேளிக்கை 74-75
4 செய்யுளும் மொழியணியும் 76

## தொகுதி 15 சேவைகள்

1 பயணச்சீட்டு முகப்பிடம் 77
2 சேவைகள் பெறுவோம் 78
3 பேருந்துப் பயணம் 79
4 செய்யுளும் மொழியணியும் 80

## தொகுதி 16 நாட்குறிப்பு

1 என் குறிப்பு 81
2 ஆசிரியர் தினம் 82-83
3 நினைவில் நின்றவை 84-85
4 செய்யுளும் மொழியணியும் 86

## தொகுதி 17 சுவைகள்

1 அறுசுவை 87-88
2 உண்போம் வாரீர் 89-90
3 சொல் உருவாக்கம் 91
4 இலக்கணம் 92

## தொகுதி 18 நல்வாழ்வு

1 மகிழ்ச்சியான குடும்பம் 93
2 கதை கேள் 94-95
3 உடல் வலிமை 96-97
4 செய்யுளும் மொழியணியும் 98


## தொகுதி 19 சுகாதாரம்

1 உடற்பயிற்சி 99
2 சுகாதாரமும் நாமும் 100
3 இனிய இல்லம் 101
4 இலக்கணம் 102

## தொகுதி 20 தாவரங்கள்

1 மலர்த் தோட்டம் 103
2 மரங்களும் பழங்களும் 104
3 விளைச்சல் 105
4 செய்யுளும் மொழியணியும் 106

# முன்னுரை



அன்பு வணக்கம்.

‘நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு’ என்பது ஔவையின் அருள் வாக்கு. அறிவு வளர்ச்சிக்கு நூல்களின் பங்கு அளப்பரியது என்பது நன்கு தெளிவாகின்றது. அவ்வகையில், கற்றல் கற்பித்தலின் முக்கியக் கூறாகப் பாடநூல் திகழ்கின்றது.

பள்ளியில் கற்றல் கற்பித்தலை வகுப்பிற்குள்ளேயும் வெளியேயும் ஊக்குவிக்கும் ஓர் ஊடகமாகப் பாடநூல் அமைகின்றது. இப்பாடநூலை உருவாக்குவதில் நூலாசிரியர்கள் பல்வேறு கூறுகளைக் கவனத்தில் கொண்டுள்ளனர். உங்கள் கைகளில் தவழும் இப்பாடநூல் தேசியப்பள்ளியில் தமிழ்மொழிப் பயிலும் இரண்டாம் ஆண்டு மாணவர்களின் தேவையை நிறைவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசியக் கல்வித் தத்துவத்தையும் தொடக்கப் பள்ளிக்கான சீரமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்ட தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தையும் அடிப்படையாகக் கொண்டு இப்பாடநூலும் நடவடிக்கை நூலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் இருபது தொகுதிகளை உள்ளடக்கியுள்ள இந்நூல்களில் ஒவ்வொரு தொகுதியிலும் நான்கு பாடங்கள் கருப்பொருள் அடிப்படையில் அமைந்துள்ளன. முதல் மூன்று பாடங்கள் முறையே கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து எனவும் நான்காவது பாடம் செய்யுளும் மொழியணியும் அல்லது இலக்கணம் எனவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டிற்கான திறன்களை அடையும் வண்ணம் பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மனத்தைக் கவரும் வண்ணப் படங்களும் QR குறியீடுகளும் ஆக்கப்பூர்வமான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் ஆசிரியர் குறிப்பும் இந்நூல்களின் சிறப்பாகும். மேலும், மாணவர்கள் ஆடிப் பாடி மகிழும் வகையில் கற்றல் கற்பித்தல் நடைபெற பாடல்களும் தரப்பட்டுள்ளன.

அறிவார்ந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கவும் சிறந்ததொரு விளைப்பயனை அடையவும் இந்நூல்கள் துணையாகும் என்று நம்பிக்கை கொள்கிறோம்.

நன்றி,

**ஆசிரியர்கள்**

கீழ்க்காணும் படச்சின்னங்கள் மாணவர்களை ஈர்க்கும் பொருட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.



கேட்டல் பேச்சு




எழுத்து




வாசிப்பு



இலக்கணம்



செய்யுளும் மொழியணியும்



உயர்நிலைச் சிந்தனைத் திறன்




பக்க எண்

கற்றல் தரம் 1.2.3

கற்றல் தரம்

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் குறிப்பு

QR நோக்குக் குறியீடு

QR வருடி செயலியைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தவும்.

# பாடம் 1 சொல்வதைச் செய்வேன்

## அ. பாடி மகிழ்க.





படி படி படி
**பாடம் படி!**

பாடு பாடு பாடு
**பாட்டுப் பாடு!**

ஆடு ஆடு ஆடு
**ஆட்டம் ஆடு!**

நட நட நட
**நேராக நட!**

நில் நில் நில்
**வரிசையில் நில்!**

செய் செய் செய்
சொல்வதைச் செய்!

(வினோத்)







கற்றல் தரம் 1.2.3

- செவிமடுத்த கட்டளையைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு

- கருமையாக்கப்பட்டிருக்கும் கட்டளைகளைச் செவிமடுத்துத் துலங்கச் செய்தல்.
- ஒருவர் கூறும் கட்டளைக்கேற்ப மற்றொருவர் துலங்குதல்.

# ஆ. செவிமடுத்த கட்டளையைக் கூறித் துலங்குக.
















கற்றல் தரம் 1.2.3

- செவிமடுத்த கட்டளையைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.


ஆசிரியர் குறிப்பு

- வகுப்பறைச் சூழல் தொடர்பான கட்டளைகளைச் செவிமடுக்கச் செய்து அதற்கேற்பத் துலங்கச் செய்தல்.
- சபைகூடலில் செவிமடுத்த கட்டளைகளைக் கூறித் துலங்கச் செய்தல்.

ந.நூ 2

## பாடம் 2 விளையாட்டு நேரம்

வாசித்திடுக.




கற்றல் தரம் 2.1.11 • சந்தச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • சந்தச் சொற்களை வகைப்படுத்திச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பதை உறுதி செய்தல்.

# பாடம் 3 பள்ளிக்குச் செல்வோம்

## அ. சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுக.



பள்ளிச் செல்ல விரும்பு
பாடம் வெல்லக் கரும்பு
படித்து விட்டுத் திரும்பு
பண்ண வேண்டாம் குறும்பு.

கூன் விழுந்த பாட்டி
குட்டைக் காலை நீட்டி
பாலும் சோறும் ஊட்டி
படுக்க வைப்பாள் ஆட்டி

*(அழ.வள்ளியப்பா)*





கற்றல் தரம் 3.1.12


- பாடலைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- பாடலைச் சரியான வரிவடித்துடன் தூய்மையாக எழுதுவதற்கு வழிகாட்டுதல்.
- பாடலில் காணப்படும் சந்தச் சொற்களை அடையாளங்கண்டு எழுதச் செய்தல்.

ந.நூ 4

## ஆ. சந்தச் சொற்களை உருவாக்கி எழுதுக.




கற்றல் தரம் 3.2.19

- சந்தச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு

- சந்தச் சொற்களை உருவாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

ந.நூ 5

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




ஆத்திசூடி

**உடையது விளம்பேல்**

பொருள்

நம்மிடம் உள்ள செல்வத்தைப் பற்றிப் பிறரிடம் தற்பெருமையாகக் கூறக்கூடாது.



கற்றல் தரம் 4.1.2

▪ இரண்டாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு


• ஆத்திசூடியையும் அதன் பொருளையும் பயிற்சிப் புத்தகத்தில் அழகுற எழுதப் பணித்தல்.

ந.நூ 6

# தொகுதி 2 நற்சிந்தனை

## பாடம் 1 கடைப்பிடிப்போம்

**செவிமடுத்துக் கூறுக.**



இருக்கையில் அமருங்கள்.



வரிசையில் நில்லுங்கள்.



சத்தம் போடாதீர்கள்.

**தயவுசெய்து**



உள்ளே செல்லுங்கள்.



கதவை மூடுங்கள்.



காலணியைக் கழற்றுங்கள்.

கற்றல் தரம் 1.2.4

- செவிமடுத்த வேண்டுகோளைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.


ஆசிரியர் குறிப்பு

- தயவுசெய்து எனும் சொல்லைப் பயன்படுத்தி வேண்டுகோள் விடுப்பதை உறுதி செய்தல்.
- வேண்டுகோள்களைச் செவிமடுத்துத் துலங்கச் செய்தல்.

## பாடம் 2 நண்பன் கிடைத்தான்

**வாசித்திடுக.**

அணிலுக்கு நண்பன் தேவைப்பட்டது.
அது குதிரையிடம் கேட்டது.
குதிரை மறுத்துச் சென்றது.









பிறகு புலியிடம் கேட்டது.
புலி அணிலைத் துரத்தியது.
அணில் தப்பிச் சென்றது.



வழியில் ஆமையைக் கண்டது.
ஆமையும் மறுத்து நகர்ந்தது.
அணில் சோர்ந்து போனது.





எதிரில் முயல் வந்தது.
அது நண்பன் ஆனது.
அணில் மகிழ்ச்சி அடைந்தது.

**கேள்விகளுக்குப் பதில் கூறுக.**



1. அணில் யாரை முதலில் சந்தித்தது?
2. அணிலைத் துரத்தியது யார்?
3. அணிலுக்கு முயல் ஏற்ற நண்பனா? ஏன்?


கற்றல் தரம் 2.2.4
- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

ஆசிரியர் குறிப்பு
- கதையை நடித்துக் காட்டப் பணித்தல்.

ந.நூ 8-௯

## பாடம் 3 நன்றே செய்

### அ. வரிவடிவத்துடன் எழுதுக.



1. இது வாழை மரம்.
2. வாழை குலை தள்ளும்.
3. வாழைப் பழம் சத்துள்ளது.
4. இலையில் உணவு உண்ணலாம்.
5. தண்டைக் கறி சமைக்கலாம்.

இது வாழை மரம்.

1. நான் ரோஜா மலர்.
2. என் நிறம் சிவப்பு.
3. மலர்களில் நான் அழகானவள்.
4. நான் அன்பின் சின்னம்.
5. என்னைப் பலர் விரும்புவர்.



நான் ரோஜா மலர்.



கற்றல் தரம் 3.1.11

- வாக்கியங்களைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- வாக்கியங்களை வரிவடிவத்துடன் எழுதுவதை உறுதி செய்தல்.

## ஆ. வாக்கியம் அமைத்திடுக.



பப்பாளி — நல்லது

பப்பாளி உடலுக்கு நல்லது.



தென்னை — வளரும்

தென்னை உயரமாக வளரும்.



தக்காளி — நிறம்

தக்காளி சிவப்பு நிறம்.



மல்லிகை — வீசும்

____________________



கரும்பு — இருக்கும்

____________________

கற்றல் தரம் 3.3.2

- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- வேறு சில சொற்களைக் கொடுத்து வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

ந.நூ 11

## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**




கற்றல் தரம் 5.2.4

- ஒன்றன்பால், பலவின்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு


- அஃறிணை ஒருமையைக் குறிப்பது ஒன்றன்பால் என்பதை விளக்குதல்.


ந.நூ 12


## பாடம் 1 பண்புடன் பேசுவோம்

### மரியாதைச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.





கற்றல் தரம் 1.3.1
- மரியாதைச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- மேற்கண்ட சூழலை வகுப்பறையில் நடித்துக் காட்டப் பணித்தல்.

## பாடம் 2 இனிய உலகம்

சரியான உச்சரிப்புடன் வாசித்திடுக.






கற்றல் தரம் 2.1.12

- க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பதை உறுதி செய்தல்.

ந.நூ 14-15

# பாடம் 3 என்னால் முடியும்

## அ. சொல்லை உருவாக்குக.



ட் ஒ ம் ட க

ஒட்டகம்



ள அ ப ம் ப்

அப்பளம்



ச ச் ல் நீ

| | ச் | ச | |
|---|---|---|---|



ர் த பு த்

| | த் | த | |
|---|---|---|---|



க வீ க் ம்

| | | | |
|---|---|---|---|



ற ற் ம் மு

| | | | |
|---|---|---|---|

கற்றல் தரம் 3.2.12

- க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்க வழிகாட்டுதல்.
- எழுத்தட்டைகள் மூலம் சொற்கள் உருவாக்கத் துணைபுரிதல்.

ந.நூ 16

## ஆ. சொற்றொடரை உருவாக்குக.





- க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.


- இரட்டை எழுத்துகளைக் கொண்ட வேறு சில சொற்றொடர்களை உருவாக்கப் பணித்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

## இரட்டைக்கிளவி



**சலசல**

நீர் ஓடும் ஓசை

அருவியில் நீர் **சலசல**வென ஓடியது.

வருடுக



**கலகல**

வாய்விட்டுச் சிரிக்கும் ஒலி

நண்பர்கள் **கலகல**வெனச் சிரித்து மகிழ்ந்தனர்.

வருடுக



கற்றல் தரம் 4.3.1

- இரண்டாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.


ஆசிரியர் குறிப்பு

- இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.

# தொகுதி 4 குடும்பம்

## பாடம் 1 உறவுகள் அறிவோம்

**கலந்துரையாடுக.**




இவர்கள் என்ன செய்கிறார்கள்?


கற்றல் தரம் 1.3.2
- உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- உறவுப் பெயர்களைப் பயன்படுத்திப் பேசச் செய்தல்.

## பாடம் 2 சிற்றப்பாவின் வருகை

**வாசித்திடுக.**






கற்றல் தரம் 2.1.18


▪ க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

• க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.

# பாடம் 3 காய்கறித் தோட்டம்

## அ. எண்களிடப்பட்ட பொருள்களைத் துணையாகக் கொண்டு சொற்றொடரை உருவாக்குக.




| | |
|---|---|
| 1. கூர்மையான கத்தரிக்கோல் | 4. சூரிய ______ |
| 2. வட்டச் சக்கரம் | 5. நீண்ட ______ |
| 3. பேரிச்சம் பழம் | 6. உணவுப் ______ |

கற்றல் தரம் 3.2.20
- க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- சொற்றொடர்களைச் சொல்வதெழுதுதலாக எழுதப் பணித்தல்.

## ஆ. படத்தின் துணையுடன் வாக்கியம் அமைத்திடுக.

1.  காய்கறி வாங்கினர்.

மக்கள் காய்கறி வாங்கினர்.

க்க

2.  வேலி அமைத்தார்

தச்சர் வேலி அமைத்தார்.

ச்ச

3. அப்பா  சென்றார்.

அப்பா தோட்டம் சென்றார்.

ட்ட

4. சமையல்  வாங்கினேன்.

சமையல் புத்தகம் வாங்கினேன்.

த்த

5. மிளகாய்  செய்தார்.

ற்ற

6.  காலணி அணிந்தார்.

ப்ப

கற்றல் தரம் 3.3.6

- க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- கற்ற வாக்கியங்களைக் கொண்டு கையெழுத்துப் போட்டி நடத்துதல்.


## பாடம் 4 இலக்கணம்

**பாடி மகிழ்க.**





ஜப்பான் செல்லலாம்
ஜாடி வாங்கலாம்



ஜொகூர் செல்லலாம்
ஜிலேபி வாங்கலாம்



டத்தோ ஸ்ரீ வந்தார்
தாஜ்மஹால் பார்த்தார்





பங்கஜம் வந்தாள்
புஷ்பம் தந்தாள்

ஸர்ப்பம் வந்தது
புஸ்ஸென்று சீறியது.









கற்றல் தரம் 5.3.1
- கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- பாடலை அழகுற எழுதப் பணித்தல்.

ந.நூ 24

## பாடம் 1 வார நாள்கள்

**கலந்துரையாடுக.**

வார முதல்நாள் **ஞாயிறு**
வருமே அதன்பின் **திங்கள்**
மூன்றாம் நாளே **செவ்வாய்**
முடிந்தே வருவது **புதனாம்**
ஐந்தாம் நாளே **வியாழன்**
அடுத்தே வந்திடும் **வெள்ளி**
இதனை அடுத்தது **சனியாம்**
இணைந்த நாள்கள் ஏழாம்

*(சி. வேலுசாமி)*





கற்றல் தரம் 1.3.3
- கிழமைகளின் பெயரைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- கிழமைகளைப் பயன்படுத்தி நாட்குறிப்பைப் பற்றி கலந்துரையாடச் செய்தல்.

## பாடம் 2 ஓய்வு நாள்

வாசித்திடுக.






கற்றல் தரம் 2.1.13

- ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பதை உறுதி செய்தல்.

ந.நூ 26

## பாடம் 3 மொழி விளையாட்டு

### அ. சொல்லை உருவாக்குக.

கி எ தி
ண்ண
ம்

கிண்ணம்
எண்ணம்
திண்ணம்






அன்னம்
பின்னம்
கன்னம்

அ பி க
ன்ன
ம்

இ செ வெ
ல்ல
ம்

இல்லம்





பள்ளம்

ப உ க
ள்ள
ம்

கற்றல் தரம் 3.2.13

▪ ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

• வேறுசில ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துக்களைக் கொண்ட வேறு சொற்களை உருவாக்கப் பணித்தல்.




ந.நூ 28

## ஆ. சொற்றொடரை உருவாக்குக.






| | |
|---|---|
| அன்பு | பறவை |
| வெள்ளை | இல்லம் |
| கனவு | கிண்ணம் |
| சந்தனக் | வெள்ளம் |
| அன்னப் | அன்னம் |
| வெள்ளிக் | பேரிடர் |
| திடீர் | |
| வெள்ளப் | |





அன்பு இல்லம்

கனவு இல்லம்



வெள்ளை அன்னம்

அன்னப் பறவை



..............................

..............................




..............................

..............................

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## கலந்துரையாடுக.




ஆத்திசூடி

**ஊக்கமது கைவிடேல்**

பொருள்

முயற்சியை விட்டு விடக்கூடாது.



கற்றல் தரம் 4.1.2

- இரண்டாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- ஆத்திசூடியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

## பாடம் 1 இன்றைய உணவு

**கலந்துரையாடுக.**



உறைப்பு



இனிப்பு

இனிக்கக் கரும்புத் துண்டு
உறைக்கக் கொஞ்சம் மிளகாய்
புளிக்க மாங்காய்த் துண்டு
கரிக்கக் கொஞ்சம் உப்பு
துவர்க்கக் கொய்யாப் பிஞ்சு
கசக்கக் கொஞ்சம் பாகற்காய்
உணவை அளந்து சாப்பிடவே
நோய்கள் பறந்து போகுமே!

*(இந்திரன்)*



கரிப்பு



புளிப்பு



துவர்ப்பு



கசப்பு

கற்றல் தரம் 1.3.4
- அறுசுவைப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- அறுசுவைக்கேற்ப உணவுப் பண்டங்களைக் கூறச் செய்தல்.

# கேளிக்கைச் சந்தை

**வாசித்திடுக.**

| | |
|---|---|
| கொடை வள்ளல் | வெள்ளிக் கிண்ணம் |
| வெள்ளப் பேரிடர் | கூடைப் பின்னல் |
| நல்ல எண்ணம் | சில்லறைக் காசு |




கற்றல் தரம் 2.1.19

- ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- போட்டி முறையில் ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை வாசிக்கச் செய்தல்.

## பாடம் 3 சிறுதொழில் செய்வோம்

### அ. சொற்றொடரை உருவாக்குக.

முள்ளங்கி

கூடைப்

வெல்லக்

வண்ண



பின்னல்

வியாபாரி

ஓவியம்

கட்டி

முள்ளங்கி வியாபாரி

கூடைப் பின்னல்

### ஆ. வாக்கியம் அமைத்திடுக.

1. பின்னல்

   அக்காள் **பின்னல்** வகுப்பிற்குச் சென்றார்.

2. முள்ளங்கி

   சந்தையில் **முள்ளங்கி** விற்றனர்.

3. வெல்லம்

4. வண்ணம்

கற்றல் தரம்
3.2.21, 3.3.7

- ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.
- ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- படங்களின் துணையுடன் சொற்றொடரை உருவாக்கத் துணைபுரிதல்.

# பாடம் 4 இலக்கணம்

## கலந்துரையாடுக.







கற்றல் தரம் 5.2.4
- ஒன்றன்பால், பலவின்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- அஃறிணை பன்மையைக் குறிப்பது பலவின்பால் என்பதை விளக்குதல்.

## பாடம் 1 இனிய பொழுது

**மரியாதைச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.**




கற்றல் தரம் 1.3.1
- மரியாதைச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- மரியாதைச் சொற்களைக் கொண்டு சூழலை நடிக்கத் தூண்டுதல்.

## பாடம் 2 விலங்ககம் சென்றோம்.

### வாசித்திடுக.

அஞ்சனா சங்கவியுடன் விலங்ககம் சென்றாள்.





சிங்கம்



தந்தம்




தின்பண்டம்



குன்றம்



ஊஞ்சல்



கம்பம்

கற்றல் தரம் 2.1.14

- ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- இனவெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.

ந.நூ 36

# பாடம் 3 உருவாக்கி மகிழ்வேன்

## அ. இனவெழுத்துச் சொற்களை உருவாக்குக.


ம | ன்ற | ம்


க | ம்ப | ம்


ப | ____ | ம்


சு | ண்ட | ல்


அ | ஞ்ச | ல்


பொ | ____ | ல்

ங்க | ஞ்ச | ண்ட | ம்ப | ன்ற | ந்த



## ஆ. சொற்றொடரை உருவாக்குக.

1. நீதி **மன்றம்**
2. **பொங்கல்** பானை
3. ____ நிலையம்
4. ____ வியாபாரி
5. தீப் ____
6. விளக்குக் ____

கற்றல் தரம் 3.2.14, 3.2.22


- ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.
- ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- உருவாக்கிய சொற்றொடர்களில் இனவெழுத்துகள் இருப்பதை உறுதி செய்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




## இணைமொழி

**அங்கும் இங்கும்**

## பொருள்

சில இடங்களில்





கற்றல் தரம் 4.4.1

- இரண்டாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

- சூழலை வகுப்பறையில் நடித்துக் காட்டச் செய்தல்.

ந.நூ 38

## பாடம் 1 பசுமை இயக்கம்

**கட்டளையைச் செவிமடுத்துக் கூறித் துலங்குக.**




கற்றல் தரம் 1.2.3
- செவிமடுத்த கட்டளையைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு
- பொது இடங்களில் காணக்கூடிய கட்டளைகளைக் கூறித் துலங்கச் செய்தல்.

பாடம் 2 **குடும்பநாள்.**

**அ. வாசித்திடுக.**

**ந்த** | **ஞ்ச** | **ம்ப** | **ங்க** | **ண்ட** | **ன்ற**



இனிப்புப் ப**ண்ட**ம்

சில**ம்ப** விளையாட்டு

ஓட்டப் ப**ந்த**யம்




கற்றல் தரம்
2.1.20

- ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- சொற்றொடர்களைப் பன்முறை வாசிக்கச் செய்தல்.

ந.நூ
40-41

# பாடம் 3 பிறந்தநாள் விழா

## அ. சொற்றொடரை உருவாக்குக.

**ந்த** — பிறந்தநாள் — பிறந்தநாள் விழா




**ங்க** — தங்கம் — தங்க மோதிரம்



**ம்ப** — கம்பளம் — சிவப்புக் கம்பளம்



**ஞ்ச** — மஞ்சள் — மஞ்சள் பலூன்



**ண்ட** — மண்டபம் — பொது மண்டபம்




**ன்ற** — அகன்ற — அகன்ற பாத்திரம்





கற்றல் தரம் 3.2.22

- ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- வேறு சில படத்திற்கேற்ற சொற்றொடரை எழுதப் பணித்தல்.

## ஆ. வாக்கியம் அமைத்திடுக.



1. **அஞ்சலி**
   **அஞ்சலி** அழகான சிறுமி.

2. **பிறந்தநாள்**
   அவள் **பிறந்தநாள்** கொண்டாடினாள்.

3. **மன்றம்**
   மாணவர் ______ விழாவை நடத்தியது.

4. **கம்பளம்**
   சிவப்புக் ______ விரித்தனர்.

5. **தின்பண்டம்**
   அனைவருக்கும் ______ வழங்கப்பட்டது.

6. **சங்கிலி**
   அப்பா தங்கச் ______ அணிவித்தார்.

கற்றல் தரம் 3.3.8
- ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- கற்ற இனவெழுத்துச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

பாடம் 4 **இலக்கணம்**

**வாசித்திடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஹா | ஷ் | ஜ | ஸ | ஸ்ரீ | க்ஷி |

**ஜ**மாலும் **ஸ்ரீ**தரனும் பூங்கா சென்றனர். ப**க்ஷி** பறந்தது. செடிகளில் பு**ஷ்**பங்கள் பூத்திருந்தன.

ஐ**ஸ்**கிரிம் வியாபாரி வந்தார். **ஹா**ரன் ஒலித்தார். அவர்கள் ஐ**ஸ்**கிரிம் உண்டனர்.





கற்றல் தரம் 5.3.1

- கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு


- கிரந்த எழுத்துச் சொற்களை வரிவடிவத்துடன் எழுதப் பணித்தல்.


ந.நூ 44


## பாடம் 1 வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்

**செவிமடுத்த வேண்டுகோளைக் கூறி அதற்கேற்பத் துலங்குக.**




கற்றல் தரம் 1.2.4
- செவிமடுத்த வேண்டுகோளைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு
- சூழலை வகுப்பறையில் நடித்துக் காட்டச் செய்தல்.

## சரியான உச்சரிப்புடன் வாசித்திடுக.

# யானை வீட்டார் திருமணம்









நாள் : ஆவணி 20
நேரம் : இரவு மணி 8.00
இடம் : காட்டு அரண்மனை

**பணிக்குழு**

| | | | |
|---|---|---|---|
| நாதஸ்வரம் | : நரி | நடனம் | : அன்னம் |
| மேளம் | : அணில் | பாடல் | : மைனா |
| வீணை | : நாரை | அணிச்சல் | : நத்தை |

**நல்வரவை எதிர்பார்க்கும் உறவினர்கள், நண்பர்கள்.**




கற்றல் தரம் 2.1.15
- ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- ணகர, நகர, னகர சொற்களை அடையாளங்கண்டு சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.

## பாடம் 3 முயற்சி செய்

### சொற்களை உருவாக்கி வாக்கியங்கள் அமைத்திடுக.





நத்தை ஊர்ந்து செல்லும்.


நான் புதினா சாப்பிட்டேன்.


 ஓசை கேட்டது.

கற்றல் தரம் 3.2.15, 3.3.3


- ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.
- சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- உருவாக்கிய சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




கணிதப் பாடமும் மொழிப் பாடமும் மிகவும் முக்கியம். இரண்டையும் அலட்சியம் செய்யாமல் கற்க வேண்டும்.



ஆத்திசூடி

**எண்ணெழுத் திகழேல்**

பொருள்

எண்களையும் மொழியையும் அலட்சியம் செய்யாமல் கற்க வேண்டும்.





கற்றல் தரம் 4.1.2

▪ இரண்டாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

• ஆத்திசூடியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

ந.நூ 48

# பாடம் 1 அன்புக் குடும்பம்

## அ. பாடி மகிழ்க.


காலை எழும் சின்னம்மா
கடமை உணர்த்தும் சிற்றப்பா

பொறுப்பு மிக்க பெரியப்பா
பொறுமை காக்கும் பெரியம்மா

பரிசு தரும் மாமா
பாசம் காட்டும் அத்தை

எண்ண எண்ண இனிக்கும்
எங்கள் அன்புக் குடும்பம்.

*(கவிஞர் சீராகி)*




கற்றல் தரம் 1.3.2


- உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு

- உறவினர்களின் பெயர்களைக் கூறுதல்.
- திரு, திருமதி போன்ற மரியாதைச் சொற்களைப் பயன்படுத்த வலியுறுத்துதல்.

## ஆ. கலந்துரையாடுக.






கற்றல் தரம் 1.3.2


- உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு

- குடும்ப உறவினர்கள் பற்றிக் கலந்துரையாடச் செய்தல்.

## பாடம் 2 பொங்கலோ பொங்கல்

### அ. வாசித்திடுக.



| ரகர | றகர |
| --- | --- |
| கரும்பு | வெற்றிலை |
| தோரணம் | ஞாயிறு |
| முந்திரி | முறம் |
| அரிசி | விறகு |
| சர்க்கரை | புறா |

கற்றல் தரம் 2.1.16

- ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- ரகர, றகர எழுத்துகள் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பதை உறுதி செய்தல்.

ந.நூ 51

## பாடம் 3 நல்ல முயற்சி

### அ. படத்திற்கேற்ற சொல்லை உருவாக்குக.



ய | சூ | ன் | ரி

சூ | ரி | ய | ன்



கு | று | க் | மு

மு | று | க் | கு



டி | கா | க | ம் | ர


க | டி | கா | ர | ம்



ல் | இ | றா



கு | றை | வ | ப | ப்



ண் | ரு | டை | உ



கற்றல் தரம் 3.2.16

- ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- வேறு சில படங்களைக் கொண்டு சொற்கள் உருவாக்கி எழுதப் பணித்தல்.

## ஆ. விடையை வாக்கியத்தில் அமைத்திடுக.

உன் பெயர் என்ன?


**என் பெயர் திராட்சை.**



திராட்சை

உன் நண்பன் யார்?


**என் நண்பன் ரம்புத்தான்.**



ரம்புத்தான்

உனக்கு என்ன வேண்டும்?

______________________



பழம்

அம்மா என்ன சமைத்தார்?

______________________



கறி

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**



### இரட்டைக்கிளவி

| | |
|---|---|
| **சலசல** | நீர் ஓடும் ஓசை |
| சலசலவென ஓடும் அருவியில் குளித்தோம். | |
| **கலகல** | வாய் விட்டுச் சிரிக்கும் ஒலி |
| கோமாளியின் செய்கையைக் கண்டு கலகலவெனச் சிரித்தனர். | |

கற்றல் தரம் 4.3.1

- இரண்டாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

- இரட்டைக்கிளவிக்கேற்ற படங்களை ஒட்டப் பணித்தல்.

## பாடம் 1 அறிவியல் கூடம்

**செவிமடுத்துக் கூறித் துலங்குக.**




உள்ளே நுழையாதே.



குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடு.



புகைப் பிடிக்காதே.



இங்குச் சாப்பிடாதே.



கையுறை அணி.




கைகளைக் கழுவு.

கற்றல் தரம் 1.2.3 ▪ செவிமடுத்த கட்டளையைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு • கட்டளைகளுக்கேற்பப் போலித்தம் செய்யப் பணித்தல்.

## பாடம் 2 என்னை அறி

### அ. வாசித்திடுக.






கற்றல் தரம் 2.1.17
- லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- லகர, ழகர, ளகர எழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பதை உறுதி செய்தல்.

ந.நூ 56

## ஆ. வாசித்திடுக.



புலி



புளி



பல்லி



பள்ளி




குளி



குழி



மலை



மழை

கற்றல் தரம் 2.1.17

- லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- மின்னட்டையைத் தயாரித்து வாசிக்கச் செய்தல்.

## பாடம் 3 சொல் உருவாக்கலாம்

### அ. சொல்லை உருவாக்குக.

1. லை, வ → வலை
2. லூ, ன், ப → பலூன்
3. லு, ம், எ, பு → எலும்பு
4. ழை, பி → ✏
5. கு, ம், ள → ✏
6. ளு, உ, ந், து → ✏
7. ளை, சு → ✏
8. ம், ழ, ப → ✏
9. க, த், து, ழு → ✏

## ஆ. வாக்கியம் அமைத்திடுக.

1. பலூன் - ஊதினான்

தம்பி பலூன் ஊதினான்.



2. தவளை - தாவியது

தவளை உயரே தாவியது.



3. பழம் - பறித்தான்

பாலன் பழம் பறித்தான்.



4. புலி - வாழும்



5. பள்ளி - சென்றாள்



கற்றல் தரம் 3.3.3

- சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- வேறு சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

### நோன்புப் பெருநாள் கொண்டாடுவோம்

**ஷாவால்** மாதம் பிறந்ததே!
**ஹரிராயா** வந்ததே!

**பாஜூ** மெலாயு கிடைத்ததே!
**ஜமாலுக்குக் குஷி** ஆனதே!

**ஷர்வின், ஜோன்** வந்தனரே!
ஒன்றாய் ரெண்டாங் உண்டனரே!






கற்றல் தரம் 5.3.1
- கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- கிரந்த எழுத்துச் சொற்களை அடையாளங்கண்டு வாசிக்கச் செய்தல்.

ந.நூ 60

# பாடம் 1 ஒன்றுகூடல்

## உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுக.




கற்றல் தரம் 1.3.2
- உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- குடும்ப உறுப்பினர்களிடையே கொண்டாடிய நிகழ்ச்சியைப் பற்றிப் பேசச் செய்தல்.

## பாடம் 2 சந்தை

**வாசித்திடுக.**






கற்றல் தரம் 2.1.21


▪ ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

• ணகர, நகர, னகர சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.

## பாடம் 3 ஓய்வு நேரம்

**அ. எண்களிடப்பட்ட பொருள்களைத் துணையாகக் கொண்டு சொற்றொடர்களை உருவாக்குக.**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சன்னல் | திரை | 4. | | லெமாக் |
| 2. | கறிப் | பானை | 5. | | கிண்ணம் |
| 3. | நிலைக் | கண்ணாடி | 6. | மடிக் | |

கற்றல் தரம் 3.2.23

- ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- படத்தில் காணப்படும் வேறு சில ணகர, நகர, னகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களை எழுதப் பணித்தல்.

ந.நூ 64

# ஆ. சொற்றொடர்களை உருவாக்கி எழுதுக.




வா க ன   ஒ ட் டு ந ர்



ம லே சி ய   நா டு





ப ய ண ச்   சீ ட் டு



து ரி த   ___ ___ ___



மி தி   ___ ___ ___




நீ ச் ச ல்   ___ ___ ___

கற்றல் தரம் 3.2.23

- ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு

- படத்தைக் கொண்டு சொற்றொடரை உருவாக்கப் பணித்தல்.

ந.நூ 65

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




## இணைமொழி

**அல்லும் பகலும்**

### பொருள்

இரவும் பகலும் / எப்பொழுதும்





கற்றல் தரம் 4.4.1

- இரண்டாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

- இணைமொழியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

## பாடம் 1 ஊக்கம் கொள்

**கிழமைகளின் பெயரைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுக.**

அலிம் பயிர் செய்கிறான்.

1



சுத்தம் செய்தான்.

2



மண்ணைக் கொத்தினான்.

3



பாத்தி அமைத்தான்.

4



விதைகள் விதைத்தான்.

5



நீர்த் தெளித்தான்.

6



தினமும் பார்வையிட்டான்.



7



கற்றல் தரம் 1.3.3
- கிழமைகளின் பெயரைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- ஒரு வாரத்தில் அம்மா செய்த சமையல் வகைகளைப் பற்றிக் கூறச் செய்தல்.

## பாடம் 2 அன்பு கொள்

**வாசித்திடுக.**



| | |
|---|---|
| செம்பருத்தி மலர் | மயில் இறகு |
| நெருப்புக் கோழி | எறும்புக் கூட்டம் |
| வெள்ளை நாரை | சுற்றுப் பயணிகள் |



கற்றல் தரம் 2.1.22

▪ ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.


ஆசிரியர் குறிப்பு

• ரகர, றகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.

ந.நூ 68

# பாடம் 3 பயிரிடுவோம்

## சொற்றொடரை உருவாக்கவும்.




| | |
|---|---|
| கரும்பு நடு | தாமரை ____ |
| சூரியகாந்திச் செடி | ஆற்றுப் ____ |
| நீர் ____ | புல் ____ |

கற்றல் தரம் 3.2.24

- ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- வேறு சில சொற்றொடர்களை உருவாக்கத் தூண்டுதல்.

## பாடம் 4 இலக்கணம்

**வாசித்திடுக.**



விமானம் பறக்கிறது.

விமானங்கள் பறக்கின்றன.





மாடு புல் மேய்கிறது.

மாடுகள் புல் மேய்கின்றன.





மரம் கீழே சாய்ந்தது.

மரங்கள் கீழே சாய்ந்தன.





கற்றல் தரம் 5.2.4

- ஒன்றன்பால், பலவின்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

- ஒன்றன்பால், பலவின்பால் சொற்கள் கொண்ட பட அட்டவணை தயாரித்து வாசிக்கச் செய்தல்.

# தொகுதி 14 உணவு

## பாடம் 1 சுவை அறிந்தேன்

**கலந்துரையாடுக.**



குரங்கு தோட்டத்தில் நுழைந்தது.

மிளகாய் கடித்தது.
**உறைப்பு, உறைப்பு** என்றது.

பிஞ்சுக் கொய்யாத் தின்றது.
**துவர்ப்பு, துவர்ப்பு** என்றது.

புளிச்சங்காய் உண்டது.
**புளிப்பு, புளிப்பு** என்றது.

பாகற்காய் மென்றது.
**கசப்பு, கசப்பு** என்றது.

உப்பு நீர்க் குடித்தது.
**கரிப்பு, கரிப்பு** என்றது.

ரம்புத்தான் பழம் சுவைத்தது.
**இனிப்பு, இனிப்பு** என்றது.

கற்றல் தரம் 1.3.4
- அறுசுவைப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- மாணவர்கள் சுவைத்த அறுசுவை உணவு வகைகளைப் பட்டியலிடப் பணித்தல்.

## பாடம் 2 உணவே மருந்து

### அ. வாசித்திடுக.



| | |
|---|---|
| வெள்ளரிப் பிஞ்சு | வாழைப் பூ |
| வல்லாரைக் கீரை | சிவப்பு முள்ளங்கி |
| மல்லி இலை | மரவள்ளிக் கிழங்கு |



கற்றல் தரம் 2.1.23

▪ லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

• லகர, ழகர, ளகர எழுத்துகள் ஏற்றுவரும் வேறு சில காய்கறிகளின் பெயர்களை வாசிக்கப் பணித்தல்.

ந.நூ 72

## ஆ. வாசித்திடுக.



கிழங்கு அவியல்



வெள்ளரிப் பச்சடி



முள்ளங்கிக் கூட்டு



வல்லாரைத் துவையல்



கறுப்பு மிளகு



வாழைப் பழம்

கற்றல் தரம் 2.1.23

- லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- வேறு சில உணவு வகை சொற்றொடர்களை உருவாக்கப் பணித்தல்.

பாடம் 3 உணவுக் கேளிக்கை

சொற்றொடரை உருவாக்குக.






கற்றல் தரம் 3.2.25

- லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கப் பணித்தல்.

ந.நூ 74-75

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## அ. பாடி மகிழ்க.



பசுமையான இலைகளைப்
பார்த்து வந்த மான்குட்டி
ஆவல் கொண்டு தின்றது. ...x2

தோட்டக்காரன் பார்த்தனன் - சுற்றி
வளைத்துக் கொண்டனன்
கறி சமைக்க நினைத்தனன். ...x2



அன்னை சொன்ன அறிவுரை
எண்ணி எண்ணிப் பார்த்தது
கண்ணீர் விட்டு அழுதது. ...x2



வருடுக

கொன்றை வேந்தன்

**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**

பொருள்

மூத்தவர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பது
சிறப்பைத் தரும்.





கற்றல் தரம் 4.2.2

- இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- பாடலைக் கதையாகக் கூறச் செய்தல்.
- அம்மா கூறிய அறிவுரை என்னவாக இருக்கும் என்பதைக் கலந்துரையாடப் பணித்தல்.

# பாடம் 1 பயணச் சீட்டு முகப்பிடம்

**கலந்துரையாடுக.**




மீனா : வணக்கம். நீங்கள் எங்குச் செல்ல வேண்டும்?

ரசாக் : வணக்கம், அக்கா. நான் மலாக்கா செல்ல வேண்டும்.

மீனா : இந்தாருங்கள், உங்கள் பயணச் சீட்டு.

ரசாக் : மிக்க நன்றி, அக்கா.

மீனா : நன்றி, மீண்டும் வருக.

கற்றல் தரம் 1.3.1
- மரியாதைச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- இணையராக உரையாடலை நடித்துக் காட்டப் பணித்தல்.

## பாடம் 2 சேவைகள் பெறுவோம்.

### அ. வாசித்து நிறைவு செய்க.



## பொது நூலகம்

இது பொது நூலகம்.

இங்கு நூல்களைப் படிக்கலாம்.

நாளேடு, இதழ்கள் வாசிக்கலாம்.

நூல்களை இரவல் பெறலாம்.

நிறைய தகவல் திரட்டலாம்.

நூலகம் நமது நண்பன்.

**பொது நூலகம்**

- நூல்கள் படிக்கலாம்.
- **இரவல்** பெறலாம்.
- ______ வாசிக்கலாம்.
- **தகவல்** ______ .
- நூலகம் நமது ______ .



கற்றல் தரம் 2.2.4

- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.


ஆசிரியர் குறிப்பு

- பொது நூலகம் தொடர்பான கூடுதல் தகவல்களைச் சேகரிக்கப் பணித்தல்.

# பாடம் 3 பேருந்துப் பயணம்

## வாக்கியம் அமைத்திடுக.





1. பேரு**ந்**து நிலைய**ம்** சென்றேன்.
2. நீல**ப்** பேருந்**தில்** ஏறினேன்.
3. ________ கொடுத்தேன்.
4. ________ வாங்கினேன்.
5. ________ அமர்ந்தேன்.

- பேரு**ந்**து நிலையம்
- நீல**ப்** பேரு**ந்**தி**ல்**
- ப**த்**து ரி**ங்**கி**ட்**
- பயண**ச்** சீ**ட்**டு
- ப**ஞ்**சு இரு**க்**கையி**ல்**



கற்றல் தரம் 3.3.4

▪ மெய்யெழுத்தைக் கொண்ட சொற்றொடர்கள் அடங்கிய வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

• மெய்யெழுத்துக் கொண்ட சொற்றொடர்கள் கொண்ட வாக்கியங்கள் அமைப்பதை உறுதி செய்தல்.

ந.நூ 79

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**







### ஆத்திசூடி

**ஏற்ப திகழ்ச்சி**

### பொருள்

உழைப்பின்றிப் பிறர் கொடுப்பதை ஏற்றுக்கொள்வது இழிவான செயலாகும்.

கற்றல் தரம் 4.1.2

▪ இரண்டாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

• சூழலைப் பாகமேற்று நடிக்கப் பணித்தல்.

## பாடம் 1 என் குறிப்பு

### கலந்துரையாடுக.

விடுமுறையில் அமுதன் சுற்றுலா சென்ற இடங்கள்:

ஞாயிறு




திங்கள்




செவ்வாய்




புதன்




வியாழன்




வெள்ளி




சனி




கற்றல் தரம் 1.3.3
- கிழமைகளின் பெயரைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- நாட்காட்டி துணையுடன் ஆசிரியர் கூறும் திகதிக்கேற்ற கிழமையைக் கூறப் பணித்தல்.

## பாடம் 2 ஆசிரியர் தினம்

**வாசித்து மனவோட்ட வரைபடத்தை நிறைவு செய்க.**

1. இன்று ஆசிரியர் தினம்.
2. சபைகூடல் ஏற்பாடு செய்யப்பட்டது.
3. தலைமையாசிரியர் உரை ஆற்றினார்.
4. மாணவர்கள் வாழ்த்துக் கூறினர்.
5. ஆசிரியர்களுக்குப் பரிசுகள் கிடைத்தன.
6. ஆசிரியர்கள் விருந்து உண்டனர்.
7. அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.




சபை
கூடல்

உரை

வாழ்த்து

**ஆசிரியர்
தினம்**






கற்றல் தரம் 2.2.4

- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

ஆசிரியர் குறிப்பு

- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களை வாசித்துப் புரிந்து கொள்ள துணைபுரிதல்.

ந.நூ 82-83

# பாடம் 3 நினைவில் நின்றவை

## அ. ஒருமை, பன்மைச் சொற்களை அறிந்து எழுதுக.



| ஒருமை | பன்மை |
|---|---|
| பூமாலை | பழங்கள் |
| அம்மி | பரிசுகள் |
| பெண் | தேங்காய்கள் |



கற்றல் தரம் 3.2.18

- ஒருமை, பன்மைச் சொற்களை அறிந்து எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- படத்தில் காணப்படும் வேறு சில ஒருமை, பன்மைச் சொற்களை எழுதச் செய்தல்.

## ஆ. படத்தின் துணையுடன் வாக்கியம் அமைத்திடுக.



பள்ளிக்கூடம் - பெரியது

என் பள்ளிக்கூடம் பெரியது.



ஆசிரியர்கள் - நல்லவர்கள்

என் ஆசிரியர்கள் நல்லவர்கள்.



பந்து - விளையாடினர்

மாணவர்கள் ____________



குளிர்பானம் - வாங்கினாள்

____________

கற்றல் தரம் 3.3.3


▪ சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

• வாக்கியத்தில் ஒருமை பன்மைச் சொற்கள் இருப்பதை உறுதி செய்தல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**இணைமொழியைச் சூழலுக்கேற்ப எழுதுக.**




| இணைமொழி | | பொருள் |
| --- | --- | --- |
| **அங்கும் இங்கும்** | - | சில இடங்களில் |
| **அல்லும் பகலும்** | - | இரவும் பகலும் / எப்பொழுதும் |





கற்றல் தரம் 4.4.1

▪ இரண்டாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

• சூழலுக்கேற்ப இணைமொழிகளைப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.

ந.நூ 86

# பாடம் 1 அறுசுவை

## கலந்துரையாடுக.






அறுசுவை ஆறு
அவற்றைக் கூறு



நான் சர்க்கரைக் கட்டி.
என்னை ருசித்துப் பார்.
என் சுவை இனிப்பு.



என்னைப் பாகற்காய் என்பர்.
என்னை மென்று பார்.
என் சுவை கசப்பு.



நான் உப்பு நீர்.
என்னைக் குடித்துப் பார்.
என் சுவை கரிப்பு.

| | | |
|---|---|---|
| **கசப்பு** | **கரிப்பு** | **இனிப்பு** |





நான் புளியம் பழம்.
என்னை உண்டு பார்.
என் சுவை புளிப்பு.



நான் சிவப்பு மிளகாய்.
என்னைக் கடித்துப் பார்.
என் சுவை உறைப்பு.



என்னை வாழைக்காய் என்பர்.
என்னைச் சாப்பிட்டுப் பார்.
என் சுவை துவர்ப்பு.

அறுசுவை உணவுகளை
அளவுடன் உண்போம்.

*(வினோத் ராஜ்)*
*(சில மாற்றங்களுடன்)*



**புளிப்பு**

**உறைப்பு**

**துவர்ப்பு**



கற்றல் தரம் 1.3.4

- அறுசுவைப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு

- உணவுப் பொருள்களின் படங்களை ஒட்டி சுவைகளைக் கூறச் செய்தல்.

## பாடம் 2 உண்போம் வாரீர்

### அ. வாசித்திடுக.



வட்டமான **தட்டு**
தட்டு நிறைய **லட்டு**
லட்டு மொத்தம் **எட்டு!**

எட்டில் பாதி **விட்டு**
எடுத்தான் மீதம் **கிட்டு**
மீதம் உள்ள **லட்டு!**

முழுதும் தங்கை **பட்டு**
போட்டாள் வாயில் **பிட்டு**
கிட்டு நான்கு **லட்டு!**



பட்டு நான்கு **லட்டு**
மொத்தம் தீர்ந்த **தெட்டு**
மீதம் காலி **தட்டு!**

*(அழ.வள்ளியப்பா)*

வருடுக

| கற்றல் தரம் | |
|---|---|
| 2.3.1 | ▪ சந்தப்பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர். |
| ஆசிரியர் குறிப்பு | • சந்தப்பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிக்கப் பணித்தல். |

## ஆ. வாசித்திடுக

ரொட்டி ரொட்டி ரொட்டியாம்
வெட்டி வெட்டி வெண்ணெயில்
தொட்டுத் தொட்டு வாயிலே
பிட்டுப் பிட்டுப் போடலாம்.





அம்மா சுட்ட தோசை
தின்ன தின்ன ஆசை
விரும்பி உண்டான் சூசை
திரும்பக் கேட்டால் பூசை.

அதோ பார் நிலா
வானில் வரும் உலா
பிடித்த பழம் பலா
வேண்டும் என்றாள் கலா.





கற்றல் தரம் 2.3.1

- சந்தப்பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.


ஆசிரியர் குறிப்பு

- சந்தப் பாடலைப் பல்வேறு தொனியுடன் வாசிக்கச் செய்தல்.
- சந்தச் சொற்களைப் பட்டியலிட்டு வாசிக்கச் செய்தல்.


ந.நூ ௭௦


## பாடம் 3 சொல் உருவாக்கம்


### சொல்லை உருவாக்குக.





மேசை
தோசை
ஆசை
பூசை








▪ சந்தச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

• சந்தச் சொற்களை உருவாக்கி மின்னட்டையில் எழுதச் செய்தல்.

# பாடம் 4 **இலக்கணம்**

**கலந்துரையாடுக.**

பத்து **காஜா** பள்ளியில் சுதந்திர நாள் கொண்டாடப்பட்டது. **ஜமிலா, ஹரிணி, ஸ்ரீதரன் ஜலோர்** கெமிலாங் உடை அணிந்திருந்தனர். தலைமையாசிரியர் **பக்ஷி**களைப் பறக்க விட்டார். அனைவரும் **சந்தோஷம்** அடைந்தனர்.





கற்றல் தரம் 5.3.1

- கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

- கிரந்த எழுத்துச் சொற்கள் கொண்ட சொல்லட்டைகள் தயாரிக்கப் பணித்தல்.

## பாடம் 1 மகிழ்ச்சியான குடும்பம்

**செவிமடுத்துக் கூறித் துலங்குக.**



தரையைப் பெருக்குங்கள்.



புத்தகங்களை அடுக்குங்கள்.



தயவுசெய்து தட்டைக் கழுவுங்கள்.



துணிகளை மடித்து வையுங்கள்.



தேநீர் கொண்டு வாருங்கள்.

கற்றல் தரம் 1.2.4

- செவிமடுத்த வேண்டுகோளைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு


- கூறப்படும் வேண்டுகோள் வாக்கியங்களைச் செவிமடுத்துப் போலித்தம் செய்யப் பணித்தல்.

## பாடம் 2 கதை கேள்

**பதில் அளித்திடுக.**


சிங்கம் படுத்து உறங்கியது.
சுண்டெலி குதித்து விளையாடியது.






சிங்கம் சுண்டெலியைப் பிடித்தது.
சுண்டெலி மன்னிப்புக் கேட்டது.


சிங்கம் வலையில் மாட்டியது.
அது உரக்கக் கர்ஜித்தது.



சுண்டெலி விரைந்து வந்தது.

வலையை அறுத்து உதவியது.





இருவரும் நண்பர்கள் ஆயினர்.

| சிங்கமும் சுண்டெலியும் | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1. | சுண்டெலி படுத்து உறங்கியது. | | ✓ |
| 2. | சுண்டெலி சிங்கத்தின் தூக்கத்தைக் களைத்தது. | | |
| 3. | சிங்கம் சினம் கொண்டது. | | |
| 4. | சிங்கம் சுண்டெலியைக் கொன்றது. | | |
| 5. | சுண்டெலி சிங்கத்திற்கு உதவியது. | | |
| 6. | இருவரும் நட்புக் கொண்டனர். | | |

கற்றல் தரம் 2.2.4

• மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

ஆசிரியர் குறிப்பு

• கதை தொடர்பான கேள்விகளுக்கு விடை கூறச் செய்தல்.

# பாடம் 3 உடல் வலிமை

**சொற்றொடரை வாசித்து வாக்கியம் அமைத்திடுக.**





- ரவா இட்டலி
- மீன் கறி
- கடுகுக் கீரை
- கோழி முட்டை
- கொய்யாப் பழம்
- சிவப்பு முள்ளங்கி
- ரொட்டித் துண்டு

1. ரவா இட்டலி உடலுக்கு நல்லது.
2. கொய்யாப் பழம் சுவையாக இருக்கும்.
3. அம்மா கடுகுக் கீரை சமைத்தார்.
4. நான் ________ சாப்பிட்டேன்.
5. ________________ .

கற்றல் தரம் 3.3.5


▪ உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்றொடர்கள் அடங்கிய வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு

• எளிய வாக்கியங்களைப் பார்த்து எழுதப் பணித்தல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




### கொன்றை வேந்தன்

**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**

### பொருள்

மூத்தவர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பது சிறப்பைத் தரும்.



கற்றல் தரம் 4.2.2

- இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- வீட்டில் மூத்தோர் கூறிய அறிவுரைகளை நினைவுகூர்ந்து கூறப் பணித்தல்.

## பாடம் 1 உடற்பயிற்சி

**செவிமடுத்துக் கூறித் துலங்குக.**





கைகளை மேலே உயர்த்து.
கால்களைச் சேர்த்து வை.

குனிந்து பாதம் தொடு.
முதுகுப் பக்கம் வளை.

கைகளை வீசி நட.
கால்களை மாற்றிக் குதி.

கழுத்துப் பயிற்சி செய்.
பயிற்சி முடிந்து செல்.





கற்றல் தரம் 1.2.3

- செவிமடுத்த கட்டளையைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு

- வட்டத்தில் நின்று, கட்டளைக்கேற்பத் துலங்கச் செய்தல்.

## பாடம் 2 சுகாதாரமும் நாமும்

**வாசித்திடுக.**



நக வெட்டி



சுத்தமான மனை



சத்தான உணவு



தானிய வகை



எண்ணெய்க் குளியல்



வெந்நீர்க் குளம்

கற்றல் தரம் 2.1.21

- ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- ணகர, நகர, னகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பதை உறுதி செய்தல்.

# பாடம் 3 இனிய இல்லம்

## சொற்றொடரை உருவாக்குக.

1. வெந்நீர்க் கோப்பை
2. இரும்பு வாணலி
3. எண்ணெய்ப் புட்டி.
4. நீர்க் குழாய்
5. ____ பழம்
6. தமிழ் ____
7. சிறிய ____




| கற்றல் தரம் 3.2.23 | ▪ ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • சொல்லைக் கொண்டு சொற்றொடரை உருவாக்கப் பணித்தல். |

## பாடம் 4 இலக்கணம்

### பாடி மகிழ்க.

அஃறிணை ஒருமை ஒன்றன்பால்
அஃறிணை பன்மை பலவின்பால்

குடை என்பது ஒன்றன்பால்
குடைகள் என்பன பலவின்பால்
மீன் என்பது ஒன்றன்பால்
மீன்கள் என்பன பலவின்பால்
மரம் என்பது ஒன்றன்பால்
மரங்கள் என்பன பலவின்பால்

*(சுசிலா)*




கற்றல் தரம் 5.2.4
- ஒன்றன்பால், பலவின்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- ஒன்றன்பால், பலவின்பால் தொடர்பான எடுத்துக்காட்டுகளைக் கூறப் பணித்தல்.

**தொகுதி 20 தாவரங்கள்**

**பாடம் 1** **மலர்த் தோட்டம்**

## செவிமடுத்த வேண்டுகோள்களைக் கூறித் துலங்குக.



பறிக்காதீர், பறிக்காதீர்
பூக்களைப் பறிக்காதீர்!

வீசாதீர், வீசாதீர்
குப்பைகளை வீசாதீர்!

மிதிக்காதீர், மிதிக்காதீர்
புல் தரையை மிதிக்காதீர்!

பிடிக்காதீர், பிடிக்காதீர்
பட்டாம்பூச்சி பிடிக்காதீர்!

அழகு ரசிக்கத்தானே!

வருடுக

கற்றல் தரம் 1.2.4


- செவிமடுத்த வேண்டுகோளைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர்.

ஆசிரியர் குறிப்பு

- QR நோக்குக் குறியீட்டில் செவிமடுக்கும் பாடல் மெட்டில் பாட வழிகாட்டுதல்.

## பாடம் 2 மரங்களும் பழங்களும்

**சொற்றொடரை வாசித்திடுக.**




| | | |
|---|---|---|
| வா**ழை**ப் ப**ழ**ம் | எ**லு**மிச்சைக் கனி | தக்கா**ளி**ச் செடி |
| நெல்**லி**மரம் | பச்சை மி**ள**காய் | ப**லா**ச் சு**ளை** |



கற்றல் தரம் 2.1.23
▪ லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
• லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக வாசிக்கப் பணித்தல்.

ந.நூ 104

பாடம் 3 **விளைச்சல்**

## சொற்றொடரை உருவாக்குக.

**மண்** தோண்டி எடுத்தேன்,
**புழு** நெளியக் கண்டேன்.

மண் புழு



**மலர்** வனம் சென்றேன்,
**அல்லி**ப் பூக்கக் கண்டேன்.



அல்லி மலர்

**காளான்** பறித்து வந்தேன்,
காரக் **குழம்பு** சமைத்தேன்.

காளான் ______



**வெள்ளைக்** கூடை எடுத்தேன்,
**முள்ளங்கி** சுமந்து வந்தேன்.



______ ______

கற்றல் தரம் 3.2.25
- லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட வேறு சில சொற்றொடர்களை உருவாக்கப் பணித்தல்.


# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

## உல்லாசப் பயணம்

குடும்பத்தோடு நீர்வீழ்ச்சிக்குச் சென்றோம். நீர் **சலசல**வென ஓடியது. நாங்கள் குளித்து மகிழ்ந்தோம்.

திறன்பேசியில் அப்பா நகைச்சுவை கேட்டார். **கலகல**வெனச் சிரித்தார்.



| | |
|---|---|
| சலசல | நீர் ஓடும் ஓசை |
| கலகல | வாய்விட்டுச் சிரிக்கும் ஒலி |



கற்றல் தரம் 4.3.1
- இரண்டாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- இரட்டைக்கிளவிகளுக்கேற்ற சூழலைக் கூறப் பணித்தல்.

Dengan ini, **SAYA BERJANJI** akan menjaga buku ini dengan baik dan bertanggungjawab atas kehilangannya, serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan.

**Skim Pinjaman Buku Teks**

**Sekolah** ____________________________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Nombor Perolehan: ____________________________________

Tarikh Penerimaan: ____________________________________

**BUKU INI TIDAK BOLEH DIJUAL**